(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984).

2. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 13/1984).

3. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984).

4. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984).

5. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984).

6. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1984);

3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டத்தில் 3,000-க்கும் அதிகமான தனியார் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

24 குமரி மாவட்டத்தில் 3,000-க்கும் அதிகமான தனியார் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து.

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 6

"குமரி மாவட்டத்தில் 3,000-க்கும் அதிகமான தனியார் தோட்டத்ச தொழிலாளர்கள் கடந்த 17—10—1983 முதல் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் தொழிலாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து"

மாண்புமிகு திரு. எஸ். இராகவானநதம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கமான அறிக்கை @ அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, தனியார் துறை நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக பஞ்சப்படி உயர்வு தர முடியாது என்று கூறியதால், அங்கே நான்கு மாத காலமாக வேலை நிறுத்தம் நடந்தது. அதனால், தொழிலாளர்களுக்கு நான்கு மாத காலம் வேலை இல்லாமல் போய், சம்பள இழப்பு ஏறபட்டுள்ளதால், அதை ஈடு செய்யும் முறையில் நான்கு மாத காலத்திற்குச் சம்பளம் தர வேண்டுமென்ற கோரிக்கையை தொழிலாளர்கள் சார்பிலே கன்சிலியேஷன் ஆபிசர் முன் வைததிருக் கிறார்கள். அரசு மற்ற பிரச்சினைகளை தொழில் கோர்ட்டுக்கு அனுப்பி யுள்ளதுபோல, இந்தக் கோர்க்கையையும் டிரிப்யூனலுக்கு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, அங்கே எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்சினை, பஞ்சப்படி கொடுத்து வந்ததை 1—4—1982லிருந்து நிறுத்திவிட்டார்கள் என்பதுதான். அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று, செக்ஷன் 10 (பி) யை 'இன்வோக்' செய்து உத்திரவு போட்டிருக்கிறோம். அது தவிர, 11—12—1982 அன்று ஓர் ஒப்பந்தம் செய்து, அதன்மூலம் 50 காசு பஞ்சப்படியும், பிறகு ஒரு ரூபாய் பஞ்சப்படியும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தையும் செயல்படுத்த வேண்டும், அதிக மாகப் பஞ்சப்படி தர வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை, எவையெவை நீதி மன்றத்திற்குப் போக வேண்டுமென்று அரசு கருதியதோ, அவைகளையெல்லாம் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம்,

திரு. ஆ. நல்லசிவன் : நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்ச ரவர்கள் பதில் சொல்லவில்லை. தொழிலாளர்களுக்கு நான்கு மாதங் களுக்கு வேலையில்லாமல் போனதற்குக் காரணம், நிர்வாகம் அவர்களுக்கு சட்டப்படி பஞ்சப்படி தர மறுத்ததால்தான் என்பதைத் தெரிவித்துக்

@ 210-212 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கோள்கிறேன். அதனால் நஷ்ட ஈடு தர வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், அரசு ரப்பர் தோட்டங்களிலும் இது போன்று பஞ்சப்படி தராமல் இருக்கிறார்கள். அதைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் ஏற்கெனவே சொன்னேன். அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பாததற்குக் காரணம்—இந்தப் பிரச்சினை குறித்து 17—10—1983 முதல் வேலைநிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்த காலத்திற்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்றும் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பக்கூடாதா என்றும் கேட்டார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னால் அரசை அணுகி அல்லது நேராக அமைச்சரவர்களை அணுகி. "செக்ஷன் 10 (பி)"-ஐ 'இன்வோக்' செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்போது, எந்தெந்தப் பிரச்சினைகளைத் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பினால், தொழிலாளர்களுக்கு, நிர்வாகத்திற்கு. அந்தத் தொழில் தொடர்ந்து நடப்பதற்கு உபயோககரமாக இருக்கும் என்பதைப் பரிசீலனை செய்து, அவற்றை அரசு நீதி மன்றத்திற்கு அனுப்புகிற அந்தக் கொள்கையைத்தான் பின்பற்றி இருக்கிறோமென்று சொன்னேன்.

(முற்பகல் 10-00)

அரசு ரப்பர் தோட்டம் பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசியிருக்கிறேன். அவர்கள் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற ரப்பர் தோட்டங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு இதுவரை கொடுக்கப்படாமல் இருக்கின்ற அகவிலைப்படி உயர்வுகளை முறையாகக் கணக்கிட்டு நிதிநிலைமைக்கு ஏற்றவாறு தவணை முறைகளில் பிரித்து உடனே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை ரப்பர் தோட்ட நிர்வாகிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.